ISSUE NO 06

JANUARY 2024

# Cyber Guardian

Publication for your online safety

SRI LANKA CERT|CC
Sri Lanka Computer Emergency Rediness Team
Coordination Centre





## இலங்கையின் இணைய பாதுகாப்பு மூலோபாய அபிவிருத்திக்கு உலக வங்கியின் ஆதரவு.

இலங்கையின் இணையப் பாதுகாப்பு மூலோபாய நடடிக்கைகளுக்கு உலக வங்கி ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. இதற்கமைவாக இலங்கை CERT நிறுவகம் உலக வங்கியின் ஒத்துழைப்புடன் 2024 2027 வரையிலான அடுத்த நான்கு ஆண்டுகளை இலக்காகக் கொண்டு இலங்கையில் தேசிய இணையப் பாதுகாப்பு மூலோபாயத்தை மேம்படுத்தும் பணிகளில் தற்போது ஈடுபட்டுள்ளது. இந்த மூலோபாயத்தின் அடிப்படை நோக்கம் இலங்கையின் இணையப் பாதுகாப்பை வலுப்படுத்துவது மற்றும் இணைய அச்சுறுத்தல்களுக்கு ஈடுகொடுக்கும் ஆற்றலை வலுப்படுத்துவதாகும்.

அதற்காக, இலங்கை CERT நிறுவகத்தினால் பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு தொழில், சட்டம் மற்றும் கொள்ளை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயல்பாட்டு ரீதியலான பங்களிப்புடன் தொடர் ஆலோசனை கருத்து பரிமாறல் அமர்வுகளை நடத்திவருகிறது. இதன் ஊடாக இணையப் பாதுகாப்பிற்கான ஒரு பரந்த மூலோபாய அணுகுமுறைக்கான அணுகலை முன்னெடுக்கக் கூடியதாகவுள்ளது. இந்த மூலோபாயத்தை செயல்படுத்துவதன் மூலம் அடையப்பட வேண்டிய குறிக்கோள்களில் (A) முகாமைத்துவ கட்டமைப்பு மறுஆய்வை செயல்படுத்தல், (B) தற்போதைய மற்றும் எதிர்கால தொழில்நுட்பத்திற்கான கொள்கைகளை வகுத்தல், (C) விழிப்புணர்வை அதிகரித்தல், (D) நிபுணத்துவ தொடர்புகளை மேம்படுத்துதல், (E) சம்பவங்கள் தொடர்பிலான பதில்களை வலுப்படுத்துதல் மற்றும் உள்ளடக்கும் திறன்களை மேம்படுத்துதல் (F) தேசிய இணைய பாதுகாப்பு நடவடிக்கைகளின் உடனடி திறன்களை அதிகரித்தல் (G) விரிவுபட்ட வகையில் பங்குதாரர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல் (H) சர்வதேச தொடர்புகளை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச கடமைகளை நிறைவேற்றுதல் (I) உள்ளூர் கூட்டாண்மைகளை ஊக்குவித்தல் முதலானவை முக்கியமாகும்.

### இந்த நோக்கங்கள் நான்கு முக்கிய பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1- சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகளை மேம்படுத்தல்

2- அறிவாற்றலை மேம்படுத்துதல்,

3- நெகிழ்ச்சி மற்றும் பின்னூட்டத்தை வலுவூட்டுதல்

4- புரிந்துணர்வை மேம்படுத்துதல் முதலானவையாகும்.

இந்த மூலோபாய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு முன்னர், இதுதொடர்பான விடயங்கள் பொது மக்களின் விரிவான ஆலோசனைக்காக முன்வைக்கப்படும். இந்த வெளிப்படையான அணுகுமுறையின் மூலம், முழு நாட்டினதும் தேவைகள் மற்றும் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் வகையில் இலங்கைக்கான தேசிய சைபர் பாதுகாப்பு மூலோபாயத்தை (2024-2027) வகுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.




## செயலற்ற கணக்குகளை Google நீக்குகிறது.

இரண்டு ஆண்டுகளாக செயல்படாமல் இருக்கும் அனைத்து Google கணக்குகளையும் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது. Google கொள்கைக்கு அமைவாக, ஒரு நபர் இரண்டு ஆண்டுகளுக்குள் தனது கணக்கில் (Login Activity) உள்நுழையவில்லை என்றால் பயனரால் அந்த கணக்கு செயலற்றதாகக் கருதப்படுகிறது.

இதில் உங்கள் Gmail கணக்கைச் சரிபார்ப்பது மட்டுமின்றி Youtube பார்ப்பது அல்லது கூகுள் தேடல்கள் அல்லது Playstore இருந்து Apps பதிவிறக்குவது ஆகியவை அடங்கும்.

இதுபோன்ற கணக்குகள் அகற்றும் பணி ஆரம்பிக்கப்படும் என்று கூகுள் கடந்த ஆண்டு மே மாதம் எச்சரித்திருந்தது. இந்தக் கொள்கைக்கான அடிப்படைக் காரணம்,பாதுகாப்பு மீறல்களுக்கு செயலற்ற கணக்குகளின் அதிகரித்த பாதிப்பு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் அவற்றின் சாத்தியமான தவறான பயன்பாடுகளேயாகும். கூடுதலான பாதுகாப்பைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் உருவாக்கப்படும் இத்தகைய கணக்குகளை சைபர் குற்றவாளிகள் எளிதாகப்பயன்படுத்திக் கொள்ள முடியும்" என்கிறார் கூகுள் நிறுவனத்தின் துணைத் தலைவர் ரூத் கிரிட்ச்லி. அந்த கணக்குகளை தாக்குபவர்கள் சில கோரிக்கைகளுக்கு மின்னஞ்சல் அனுப்ப அல்லது நபர்களின் அடையாளங்களை திருட பயன்படுத்தலாம் என்று நிறுவனம் மேலும் எச்சரிக்கிறது.
"பதிவுசெய்யப்பட்ட எங்கள் சேவைகளை நீங்கள் இனி பயன்படுத்தாவிட்டால், கணக்கிற்கு அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்க" இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பயனர்களுக்கு அறிவிக்கப்படுவதாக Google தெரிவித்துள்ளது.
பயனர்கள் தங்கள் கணக்குகளை நீக்குவதற்கு குறைந்தது எட்டு மாதங்களுக்கு முன்னறிவிப்பை வழங்குவதாக கூகுள் கூறியுள்ளது. ஒரு கணக்கை நீக்கியவுடன், அதனுடன் தொடர்புடைய மின்னஞ்சல் இனி கிடைக்காது. மேலும் பழைய மற்றும் இப்போது மீட்டெடுக்கப்பட்ட முகவரிகளை யாரும் திருட முடியாது. 2022 அறிக்கைகளின்படி, தினசரி E -mail பயன்பாடு மட்டும் 121 பில்லியனைத் தாண்டியுள்ளது.

## உங்கள் பிள்ளைக்கு இணையத்தை பாதுகாப்பான இடமாக ஆக்குவோம்



பல பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இணையத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி கவலைப்படுவது அதன் மூலம் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளினாலேயே என்பது இரகசியமான விடயமல்ல. இதனால் உங்கள் பிள்ளைகளுக்கு இணையத்தை பாதுகாப்பான இடமாக மேம்படுத்துவதற்கு உங்களால் மட்டுமே முடியும். எனவே இந்த நடைமுறைகளை நீங்களே பின்பற்றலாம்.

1.உங்கள் பிள்ளை இணையம் மற்றும் சமூக ஊடகங்களை பயன்படுத்தும் போது அதனை கண்காணிக்கவும்.
2.முன் பின் அறியாத நபர்களிடமிருந்து வரும் அழைப்பு, குறுஞ்செய்திகள் E-mail (மின்னஞ்சல்கள்) குறித்து கவனம் செலுத்துங்கள்.
3.சமூக ஊடக நண்பர்கள் மற்றும் தகவல் பகிர்வு பற்றி பிள்ளைகளிடம் கேளுங்கள். படங்கள் மற்றும் வீடியோக்களை பகிர வேண்டாம் என அறிவுறுத்துங்கள்.
4.பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கணக்குகளின் பயனர் அடையாளங்கள் மற்றும் கடவுச்சொற்களைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். பல காரணி Multi-factor Authentication அங்கீகாரம் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
5.இணையத்துடன் தொடர்புபட்ட,வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் மற்றும் வலுவான கடவுச்சொற்கள் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் அனைத்து சாதனங்களுக்கும் பின்பற்றப்பட வேண்டும்.
6.கற்றல் நடவடிக்கைகள் உட்பட பிற Online செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் Password கடவுச்சொல்லை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
7.உங்களது மற்றும் பிள்ளைகளின் டிஜிட்டல் அடையாளத்தை சமூக ஊடகங்கள் மற்றும் பிற இணையதளங்களில் வெளிப்படுத்தும் எதையும் இடுகையிட வேண்டாம்.
8.பிள்ளையின் இணையப் பாதுகாப்பிற்காக இணைய வழங்குநர்களின் பரிந்துரையின் பேரில் அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்புப் பயன்பாடுகளை சரியான முறையில் பயன்படுத்தவும்.
9.இணைய அணுகலுக்குப் பயன்படுத்தப்படும் கணினியை அனைவரும் பார்க்கும் மற்றும் உதவக்கூடிய இடத்தில் வைக்கவும். அதன் பயன்பாட்டின் நேரத்தைக் கட்டுப்படுத்தவும் மற்றும் பிற வெளிப்புற நடவடிக்கைகளில் அதைப் பயன்படுத்தவும்.
10.இணைய துஷ்பிரயோகம் ஏதேனும் நடந்தால் விரைவில் சம்பந்தப்பட்ட துறையினரிடம் முறையிடவும்.

## Kaspersky இன் பிராந்திய குழு ,இலங்கை CERT நிறுவகத்திற்கு விஜயம்

Kaspersky இன் பிராந்திய குழுவினர், கடந்த ஜனவரி 31ஆம் திகதி, இலங்கை CERT நிறுவகத்திற்கு விஜயம் செய்தனர்.பிராந்திய பணிப்பாளர் Genie Gan, அரசாங்க விவகாரங்கள் மற்றும் பொதுக் கொள்கை முகாமையாளர் Siang Tiong, தென்கிழக்கு ஆசியா மற்றும் ஆசிய வளர்ந்து வரும் நாடுகளுக்கான பொது முகாமையாளர் Lee Heng, பொது விவகார முகாமையாளர் ,(APAC) மற்றும் Sam Yan- விற்பனைத் தலைமை அதிகாரி ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றிருந்தனர். பல்வேறு தலைப்புகளில் கலந்துரையாடலுக்கான தளமாக இந்த சந்திப்பு அமைந்தமை குறிப்பிடத்தக்கது.இந்த கலந்துரையாடலின் போது, Kaspersky பிரதிநிதிகள் அவர்ளின் சமீபத்திய முன்னேற்றங்கள், அவர்களின் அரசாங்க கூட்டாண்மை திட்டங்கள், இணைய பாதுகாப்பு மூலோபாய மேம்பாட்டில் காணப்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான தற்போதைய திட்டங்கள் உட்பட நுண்ணறிவு குறித்த விடயங்களை பகிர்ந்துகொண்டனர். மேலும், அவர்கள் மற்ற நாடுகளில் தேசிய அளவிலான Kaspersky யின் ஈடுபாடுகளையும் விரிவாகத் தெளிவுபடுத்தினர்.

இக்கலந்துரையாடலின் மூலம் Kaspersky மற்றும் Sri Lanka CERT நிறுவகத்திற்கிடையே புரிந்துணர்வு வலுப்படுத்தப்பட்டதுடன் இணைய அச்சுறுத்தல் நுண்ணறிவைப் பகிர்தல் புலனாய்வு தகவல்களை பரிமாறிக்கொள்ளல்,திறன் மேம்பாட்டிற்கு உதவுதல், மூலோபாயம் மற்றும் கொள்கை மேம்பாட்டிற்கு நிபுணத்துவம் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இலங்கை CERT நிறுவகத்திற்கு ஒத்துழைப்பை வழங்கவும் விருப்பம் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் இணைய பாதுகாப்பு திறன் மற்றும் தயார்நிலை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக பாதுகாப்பு தீர்வுகள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் இத்துறையில் உள்ள இணைய பாதுகாப்பு அமைப்புகளுக்கு இடையேயான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் இந்த கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது.